செய்தி வெளியீடு எண். 08 நாள் 07.01.2013

**தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு, வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஏழை எளியோருக்கு ஏறத்ததாழ 256 கோடி ரூபாய் செலவில், ஒரு கோடியே 78 இலட்சம் சேலைகளும், ஒரு கோடியே 77 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன**

ஆண்டுதோறும் வழங்கப்படும் விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் தரமானவையாகவும், நீடித்து உழைத்திட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவின் பெயரில், பருத்தி நூலுடன் பாலியஸ்டர் நூல் கலந்து வேட்டிகள் மற்றும் சேலைகளை உற்பத்தி செய்து வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது கடந்த 2003 ஆம் ஆண்டு ஆணையிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் தற்போது விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டும் விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கிடும் பணிகளை துரிதப்படுத்தி, சனவரி 2013 முதல் வாரத்தில் தொடங்கிட கடந்த 28.09.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில், கடந்த 2ஆம் தேதி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு 'தோப்பு' என். டி. வெங்கடாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், இப்பணிகளை மாநிலம் முழுதும் விரைவுபடுத்திட உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள தக்க அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

மாநிலம் முழுதும் கடந்த 1ஆம் தேதி முதல் விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. நாளது வரையில், 15 இலட்சத்து 43 ஆயிரத்து 430 சேலைகளும், 14 இலட்சத்து 92 ஆயிரத்து 708 வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் விநியோகப் பணிகள் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் இன்று (07.01.2013) நடைபெற்றது. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 7 இலட்சத்து 97 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டிகளும் 7 இலட்சத்து 97 பயனாளிகளுக்கு சேலைகளும் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாளது வரையில், ஏறத்தாழ தலா 90 ஆயிரம் பயனாளிகளுக்கு வேட்டிகள் மற்றம் சேலைகள் வழங்கப்பட்டுள்ளன. பொங்கல் பண்டிகைக்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை எய்திட வருவாய்த்துறை அலுவலர்கள் விரைந்து பணியாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை முதன்மைச் செயலர் திரு. ராஜீவ்ரஞ்சன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) திருமதி சீதாலெட்சுமி மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9